1978 மார்ச் 22]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, ரிசர்வ் பாங்கு என்று சாக்குச் சொல்லாதீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். இந்த ரிசர்வ் பாங்கியிட மிருந்து பணம் பெற்றுத்தான் இந்தக் கூட்டுறவுத் துறையின் மூலம் பணம், கடன் வழங்கப்படுகின்றது என்பது. எவ்வளவு காலத்துக்கு இதைத் திருப்பிச் செலுத்துவதிலே காலதாமதம் ஏற்படு கிறதோ, அந்த காலத்திற்காக வட்டியும் சேர்த்து ரிசர்வ் பாங் கிற்கு கட்ட வேண்டியிருக்கிறது என்பதை அவர் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

கல்லல் பஞ்சாயத்துக்குச் சொந்தமான பம்ப்செட்.

* 7. குறுகிய கால வினு.— திரு. ஓ. சுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பரா:—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கல்லல் பஞ்சாயத்திற் குரிய பம்ப் செட்டை நரியங்குடி பஞ்சாயத்திற்கு விற்றுவிட்டு களவு செய்யப்பட்டதாக புகார் செய்யப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து —

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஓ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், கல்லல் பஞ்சாயத்திலே ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருப்பவர் ஒன்றியத் தலைவராகவும் இருந் தார். அதன்காரணமாக நரியங்குடி பஞ்சாயத்திற்கு, கல்லல் பஞ்சாயத்தைச் சேர்ந்த இந்த பம்பு செட்டை விலைக்கு விற்று, அது நரியங்குடி கிராமத்திலே இன்றும் ஓடிக்கொண்டிருக்கிறது. சமீபத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே விஜயம் செய்தபோது, இந்த கிராமத்து மக்கள் அவருக்குக் காண்பித்தார்கள். அப்படி இருக்கும்போது இதைப் பற்றி தகவல் இல்லை என்று சொல்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆகவே, அந்தக் கிராம மக்கள் புகார் செய்திருக் கின்ற காரணத்தாலே, இனியேனும் தீர விசாரித்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, கல்லல் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் 18—12—1977-ல் பார்வை யிட்டபோது அதற்கான அறையில் மின்மோட்டார், இதர

சாதனங்கள் இல்லாததால், கல்லல் ஊராட்சி மன்றத் தலைவரை இதுபற்றி அறிக்கை கோரப்பட்டது. அறிக்கை உடன் கிடைக்கப் பெறாததால் இதுபற்றி கல்லல் காவல் நிலையத்திற்குப் புலனாய்வு செய்ய புகார் கொடுக்கப்பட்டது. ஆனால், இதற்கிடையில் அதை நரியங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் தவசியேந்தல்பட்டி அரிசனங்கள் விவசாயத்துக்குத் தங்கள் செலவில் மராமத்து செய்து மாத வாடகை ரூ. 30க்கு 15—6—1977-ல் எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதற்குப்பிறகு, இந்த பம்பு செட்டு இருக்கும் விவரம் தெரிந்த காரணத்தால், போலீஸ் மூலம் எடுக்கும் நடவடிக்கையை வாபஸ் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இந்தக் குறைபாடு ஊராட்சித் தலைவர் அவர்கள் மேல் இருக்கின்ற காரணத்தால், அவர் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஓ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, ஒரு பஞ்சாயத்தைச் சேர்ந்த பம்பு செட்டை எந்தவிதமான அதிகாரமும் இன்றி, வாடகைக்கு கொடுப்பதற்கோ, விற்பதற்கோ அதிகாரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது தவறு என்ற காரணத்தால்தான் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

நாங்குநேரி வட்டத்தில் அணைக்கட்டுத் திட்டங்கள்.

*653 வினா— திரு. மு. ஜான் வின்சென்ட் திரு. மு. ஆறுமுகம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நெல்லை மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில், கொடுமுடி அணைத்திட்ட வேலைகள் தற்சமயம் நடைபெறாதது உண்மையா ?

(ஆ) ஆம் என்றால், அதற்கான காரணம் என்ன ?

(இ) இத் திட்டப்பணிகளை முடிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) இத் திட்டம் மறுபரிசீலனையில் உள்ளது